1974 ஏப்ரல் 27]

(4) நொடித்த தனியார் துறை பஞ்சாலைகள் நாட்டுடைமையாக்கப்படுதல்

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே,

"1951 ஆம் ஆண்டு, தொழிலாளர் (வளர்ச்சி முறைப்படுத்தல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 65/1951) கீழும், 1972 ஆம் ஆண்டு நொடித்த பஞ்சாலைகள் (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) சட்டத்தின் கீழும் (மத்தியச் சட்டம் 72/1972) இம்மாநிலத்தில் உள்ள நொடித்த தனியார் துறை பஞ்சாலைகள் சிலவற்றை மேற்கொள்ள மத்திய அரசு ஆணையிட்டுள்ளதாலும்;

அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பஞ்சாலைகளின் நிர்வாகத்தை மத்திய அரசு, தமிழ் நாடு பஞ்சாலைக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளதாலும்;

ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் இந்த ஆலைகளை மீண்டும் செயல்படச் செய்ய இந்த ஆலைகளில் மாநில அரசும், மத்திய அரசும் கணிசமான நிதிகளை முதலீடு செய்துள்ளதாலும்;

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்கிறது :—

1. மேற்கொள்ளப்பட்ட ஆலைகள் தாமதமின்றி நாட்டுடைமையாக்கப்பட வேண்டும்;

2. நாட்டுடைமையாக்கும் பணி மாநில அரசினால் செய்யப்பட வேண்டும்;

3. இந்த பஞ்சாலைகளைத் திறம்பட நிர்வகித்துவரும் தமிழ் நாடு பஞ்சாலைக் கழகம் இந்த ஆலைகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னரும் இந்த ஆலைகளைத் தொடர்ந்து நிர்வகித்து வர வேண்டும்;

4. அரசின் உதவியுடனும், ஏனைய பொது நிதிகளின் உதவியுடனும் இந்த ஆலைகளில் செய்யப்படும் மேம்பாடுகளினால் கிடைக்கும் நன்மை முந்திய நிர்வாகத்திற்குக் கிடைக்காத வகையில் இழப்பீட்டுத் தொகை முடிவு செய்யப்பட வேண்டும்.

5. இது குறித்து அவசியமான சட்டமியற்றும் அதிகாரம், மாநில அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை —

" 1951 ஆம் ஆண்டு, தொழில்கள் (வளர்ச்சி முறைப்படுத்தல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 65/1951) கீழும், 1972 ஆம் ஆண்டு நொடித்த பஞ்சாலைகள் (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) சட்டத்தின் கீழும் (மத்தியச் சட்டம் 72/1972) இம் மாநிலத்தில் உள்ள நொடித்த தனியார் துறை பஞ்சாலைகள் சிலவற்றை மேற்கொள்ள மத்திய அரசு ஆணையிட்டுள்ளதாலும் ;

அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பஞ்சாலைகளின் நிர்வாகத்தை மத்திய அரசு, தமிழ் நாடு பஞ்சாலைக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளதாலும் ;

ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் இந்த ஆலைகளை மீண்டும் செயல்படச் செய்ய இந்த ஆலைகளில் மாநில அரசும், மத்திய அரசும் கணிசமான நிதிகளை முதலீடு செய்துள்ளதாலும் ;

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்கிறது :—

1. மேற்கொள்ளப்பட்ட ஆலைகள் தாமதமின்றி நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் ;

2. நாட்டுடைமையாக்கும் பணி மாநில அரசினால் செய்யப்படவேண்டும் ;

3. இந்த பஞ்சாலைகளைத் திறம்பட நிர்வகித்து வரும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் இந்த ஆலைகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னரும் இந்த ஆலைகளைத் தொடர்ந்து நிர்வகித்து வரவேண்டும் ;

4. அரசின் உதவியுடனும் ஏனைய பொது நிதிகளின் உதவியுடனும் இந்த ஆலைகளில் செய்யப்படும் மேம்பாடுகளினால் கிடைக்கும் நன்மை முந்திய நிர்வாகத்திற்குக் கிடைக்காத வகையில், இழப்பீட்டுத் தொகை முடிவு செய்யப்பட வேண்டும் ;

5. இது குறித்து அவசியமான சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுகின்றது.

(6—55 பிற்பகல்)

பின்னர், அவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.